# கலைஞரும் நானும்

82

**முத்தமிழறிஞர் கலைஞர் அடிப்படையில், பத்திரிகையாளராகவும் இருந்தவர். அந்த வகையில், புகைப்படக்காரர்களுக்கு ஒத்துழைக்கும் தலைவர்களில் அவரைப் போல மற்றொருவரைப் பார்க்க முடியாது என, தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் ஒளிப்பதிவாளர் 'வைட் ஆங்கிள்' ரவிசங்கர்.**





## "தரையில் ஏன் அமர வேண்டும்?"

'வைட் ஆங்கிள்' **ரவிசங்கர்**



"கலைஞர் என நாம் கொண்டாடும் தன்னிகரில்லா அந்தத் தலைவரை, நான் எடுத்த சில புகைப்படங்கள் அரிதான படங்கள் வரிசையில், இடம் பெற்றுள்ளன என்பதை நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கும். அந்தப் படங்களை கலைஞரும் ரசித்துப் பாராட்டி இருக்கிறார், என்பது அந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும்.

எனது தந்தை காமராஜலு பத்திரிகையாளர் என்பதால், நானும் அந்தத் துறையிலேயே பணியாற்ற விரும்பினேன். அதேநேரத்தில் புகைப்படக் கலை ஆர்வம் என்னை அதை நோக்கி இழுத்துக் கொண்டது. அதையடுத்து கல்லூரி முடித்ததும், அப்போது மிகவும் பிரபல புகைப்படக்காரரான 'சுபா' சுந்தரத்திடம் சேர்ந்தேன். அவரிடம்தான் புகைப்படத் தொழிலைக் கற்றுக்கொண்டேன். கற்றுக் கொண்டேன் என்பதுடன், அரசியல் ஆளுமைகள் பலரையும் புகைப்படம் எடுக்கிற வாய்ப்பும் அங்கே பெற்றேன். அவரிடம் இருந்தபோதும், அதன் பின்னர் 'இந்தியா டுடே' பத்திரிகையில் இருந்தபோதும், கலைஞரைப் பலமுறை புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன். ராயப்பேட்டை அம்மையப்பன் தெருவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலைஞர் பேசும்போது நான் எடுத்த படம், 'இந்தியா டுடே' பத்திரிகையில் வெளிவந்து எனக்கு முதன்முதலில் மிகப்பெரிய அளவில் பாராட்டுகளைப் பெற்றுத்தந்தது.

### 'சுபமங்களா' வாய்ப்பு

அந்தப் படம்தான், வித்தியாசமாக வேலை செய்தால், கவனிக்கப்படுவோம் என என்னைத் தூண்டிய படம். அந்த வகையில், எனக்கு உத்வேகம், புதிய கண்ணோட்டத்தை அளித்தவர் கலைஞர் என்பேன். அந்த நேரத்தில்தான் 'சுபமங்களா' பத்திரிகை எனக்கு சிறந்த வாய்ப்பினை வழங்கியது.

அந்தப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக எனது நண்பர் இளையபாரதி பணியாற்றினார். ஆசிரியர் கோமல் சுவாமிநாதன், எழுத்தாளர்களை நேர்காணல் செய்யும் தொடருக்கு படம் எடுக்க வேண்டும் என்று என்னை அணுகினார் இளையபாரதி.

அந்தத் தொடருக்காக, ஒவ்வொரு எழுத்தாளரையும் வித்தியாசமான கோணங்களில் 10 முதல் 15 புகைப்படங்கள் எடுத்துக் கொடுத்து வந்தேன். அந்தப் புகைப்படங்களும் வாசகர்களிடம் வரவேற்பினைப் பெற்றன. அந்த வரிசையில், 'சுபமங்களா' தீபாவளி மலருக்காக கலைஞரை நேர்காணல் செய்யத் திட்டமிட்டார் கோமல் சுவாமிநாதன்.

கலைஞரை வித்தியாசமாக எப்படிப் புகைப்படம் எடுக்கலாம் என யோசித்து, தரையில் அமர வைத்து நேர்காணல் செய்யலாம் என கோமல் அவர்களிடம் நான் சொன்னேன். ஏனென்றால், கலைஞர் தரையில் அமர்ந்திருப்பதுபோன்ற புகைப்படங்கள் அதுவரையில் அரிது.

1952-ஆம் ஆண்டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருமணத்தின்போது, கலைஞர், எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், ராம அரங்கண்ணல் ஆகியோர் தரையில் அமர்ந்து இயல்பாக உரையாடிக் கொண்டிருக்கும் ஒரு படத்தினை நான் பார்த்திருக்கிறேன். அதன்பின்னர் அப்படி ஒரு படமே இல்லை. எனது யோசனையைச் சொன்னதும், கோமல் பதறிவிட்டார். அவர் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. "அவர் எவ்வளவு பெரிய எழுத்தாளர், அரசியல்வாதி, அது மட்டுமன்றி தமிழ்நாட்டில் மூன்றுமுறை முதலமைச்சராக இருந்தவர். அவரை எப்படி தரையிலே உட்காரச் சொல்ல முடியும்?" எனக் கேட்டார். கேட்டுப் பார்ப்போம் என காத்திருந்தேன்.

கலைஞர் வந்ததும், 'தம்பி ஏதோ உங்களிடம் சொல்ல வேண்டுமாம்' என்று கோமல் சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

### 'என்ன?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார் கலைஞர்.

"சிவாஜியின் திருமணத்தில் நீங்கள் தரையில் அமர்ந்திருந்த போட்டோ இன்றும் என் நினைவில் இருக்கிறது. அதேபோன்று, இப்போது புகைப்படத்தை எடுக்க ஆசைப்படுகிறேன்" என்றேன். "நான் தரையில் உட்காரச் சம்மதிக்கவில்லை என்றால் நீ என்ன செய்வாய்?" என்று கலைஞர் என்னிடம் கேட்டார்.

"ஏற்கெனவே கோபாலபுரம் வீட்டிலும், ஆலிவர் சாலை வீட்டிலும் எடுத்தப் படங்கள் என்னிடம் நிறைய உள்ளன. அதிலிருந்து சில படங்களை தேர்ந்தெடுத்து இவர்களுக்குக் கொடுத்து விடலாம். ஆனால், வித்தியாசமாக எடுத்தால் புதிதாகப் பயன்படுத்தலாம்" என்றேன்.

**"புகைப்படங்கள் அனைத்தையும் பார்த்தேன். வெகு சிறப்பு. என்னையே புதிதாகப் பார்ப்பதுபோன்ற ஒரு அனுபவத்தை எனக்குக் கொடுத்துவிட்டாய்!"**

எனது பதிலைக் கேட்டவர், "சரி, நான் ஏன் தரையிலே அமர்ந்து போஸ் தர வேண்டும் என்பதற்கு சரியான காரணத்தை நீ எனக்குச் சொல்" என மீண்டும் கேட்டார்.

"நீங்கள் படித்துக் கொண்டிருக்கும், நின்றுகொண்டிருக்கும் புகைப்படங்கள்தான் பெரும்பாலும் எல்லாப் பத்திரிகைகளிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதிலிருந்து வித்தியாசமாக உங்களைப் படம் எடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை" என்று சொன்னேன்.

அதைக் கேட்டு சிரித்தபடியே, "சரிப்பா. உன் படங்களை எல்லாம் நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். இப்போது நான் எங்கே உட்கார வேண்டும்?" என அடுத்த நொடியே தயாராகிவிட்டார். நான் ஏற்கனவே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்ததால் அந்த இடத்தை அவருக்குக் காட்டினேன்.

அந்த நேர்காணல் கிட்டத்தட்ட மூன்றரை மணிநேரம் நடைபெற்றது. அந்த மூன்றரை மணிநேரமும் தரையிலேதான் அமர்ந்திருந்தார் கலைஞர். அது அவருக்குச் சிரமமாக இருந்ததை என்னால் உணர முடிந்தது. ஆனால், அதை அவர் வெளிக்காட்டிக்கொள்ளவே இல்லை.

நேர்காணல் முடிந்து, நாங்கள் கிளம்பியபோது, "இந்தப் புகைப்படங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்பு எனக்குக் காட்டு" என்று சொன்னார். மறுநாள் அந்தப் புகைப்படங்களை இளையபாரதி மூலம் அவருக்கு கொடுத்தனுப்பி இருந்தேன்.

### மீண்டும் அழைப்பு

படங்களைப் பார்த்த கலைஞர், "எங்கே தம்பி ரவி வரவில்லையா?" எனக் கேட்டிருக்கிறார். நான் வெளியூர் சென்றுவிட்டு, இரண்டு நாட்களுக்குப் பின் திரும்பி வந்தபோது, அய்யா சின்னக்குத்தூசி அவர்கள் தொலைபேசி செய்து "எங்க போயிட்ட நீ? தலைவர் உன்னை தேடிக்கொண்டிருக்கிறார்" என்று சொன்னார்.

நான் கலைஞரை 'முரசொலி' அலுவலகத்தில் சென்று அவரைப் பார்த்ததும், மகிழ்ச்சியுடன் வரவேற்றார். "புகைப்படங்கள் அனைத்தையும் பார்த்தேன். வெகு சிறப்பு. என்னையே புதிதாகப் பார்ப்பதுபோன்ற ஒரு அனுபவத்தை எனக்குக் கொடுத்துவிட்டாய்" என்று அவர் அன்று பாராட்டியது மறக்க முடியாத அனுபவம். அப்போதே, "அய்யா, மீண்டும் உங்களைப் புகைப்படம் எடுக்க ஒரு வாய்ப்பு தர வேண்டும்" என்று கேட்டேன்.

"அன்று மூன்றரை மணி நேரத்துக்கு மேலாக படாதபாடு படுத்தினாயே, அது போதாதா?"என்று சிரித்தபடியே சொன்னவர்,"எப்போது" எனக் கேட்டார்.

"நீங்க வீட்டில இருக்கும்போது...லுங்கியில் ரிலாக்ஸாக இருக்கும் தோற்றத்தில் படம் எடுக்க ஆசை" என்று கூறியதும், சிரித்த அவர், "சரி இன்று மாலை நாலு மணிக்கு ஆலிவர் சாலை வீட்டுக்கு வந்துவிடு" என்றார். அதேபோல, அன்று மாலை வீட்டுக்குச் சென்றபோது லுங்கியும் பனியனும் அணிந்து கொண்டு தயாராக இருந்தார். அன்றைக்கு என் ஆசை தீர பல கோணங்களில் அவரைப் படங்கள் எடுத்தேன். அதன் பிறகு, எந்த இடத்தில் என்னைப் பார்த்தாலும் என்னிடம் அன்போடு பேசுவார்.

அதன்பின்னர், பல சந்தர்ப்பங்களில் அவரைப் படம் எடுத்திருந்தாலும், 'குமுதம்' பத்திரிகைக்காக பத்திரிகையாளர் மணா நேர்காணல் செய்தபோது, நான் எடுத்த படமும் அதுவரை பார்க்காத கலைஞரைக் காட்டும்.

அப்போதுதான், பார்வையாளர்கள் வைத்துவிட்டுச் சென்ற மைசூர் தலைப்பாகை ஒன்று அவரது வீட்டில் இருந்ததைப் பார்த்தேன். அதைப் பார்த்த உடனேயே அந்த தலைப்பாகையோடு கலைஞரை படம் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

நேர்காணல் முடிந்தவுடன் என்னைப் பார்த்து 'இன்னைக்கு என்னய்யா பண்ணப் போற?' என்று கேட்டார். "இந்த மைசூர் தலைப்பாகையை அணிந்துகொண்டு போட்டோ எடுக்கலாம் அய்யா" என்றேன். அந்த புகைப்படமும் எனக்கு மிகப்பெரிய பெயரை வாங்கித் தந்தது.

இப்படி அவருக்குப் பிடித்த, அவர் மனதுக்கு நெருக்கமான புகைப்படங்களை எடுத்திருக்கிறேன் என்பது எனக்குப் பெருமையளிக்கும். அந்தப் புகைப்படங்கள், காலங்கள் கடந்து நிலைத்து நிற்கும்" என்கிறார் புன்னகை ததும்ப.

*....பகிர்வார்கள்*

## வழிகாட்டும் தமிழ்நாடு!

தமிழ்நாடு எப்போதுமே இந்தியாவுக்கு முன்மாதிரியான மாநிலமாக விளங்குகிறது என்றால். அதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். பகுத்தறிவு, இட ஒதுக்கீடு, இந்தித் திணிப்பு எதிர்ப்பு, மாநில உரிமைகளை வலியுறுத்துவது ஆகிய குரல்களைப் பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே ஓங்கி ஒலித்தது, திராவிட இயக்கம். இன்று இந்தியாவின் பல மாநிலங்களிலும் இந்தக் குரல்கள் ஒலிப்பதைப் பார்க்கலாம்.

அரசியல் தளத்தில் மட்டுமல்ல, பண்பாட்டுத்தளத்திலும் தனிமனித வாழ்வியல் தளத்திலும்கூட திராவிட இயக்கமே முன்னோடி. ஒடுக்கப்பட்டோரில் ஒடுக்கப்பட்டோராக இருக்கும், அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு கொடுத்தல், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் போன்ற விளிம்புநிலைச் சமூகங்களின் முன்னேற்றத்துக்கான வழியமைத்துக் கொடுத்தல் ஆகியவற்றைத் திராவிட முன்னேற்றக் கழகமே செய்தது.


சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு காலநிலை மாற்றத்துக்கான இயக்கம், மீண்டும் மஞ்சப்பை ஆகிய சமகாலத் தேவைக்கான முன்னெடுப்பையும் 'திராவிட மாடல் அரசு' முன்னெடுத்து வருகிறது.

'மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புதானம் செய்பவர்களின் இறுதிச்சடங்கின்போது அரசு மரியாதை செய்யப்படும்' என்று 2023, செப்டம்பர் 22 அன்று அறிவித்தார் தமிழ்நாடு முதலமைச்சர். இந்தியாவிலேயே வேறெந்த மாநிலமும் யோசிக்காத வகையில், 'உறுப்பு தானம்' விழிப்புணர்வைத் தொடங்கிய மாநிலம் தமிழ்நாடுதான். அப்படி உறுப்புதானம் செய்கையில், இறந்தவருக்கு 'அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு' என அறிவித்ததும் திராவிட மாடல் ஆட்சிதான்.

அதுமட்டுமல்ல; வேறெந்த அரசியல் தலைவரும் செய்யாத மகத்தான முன்னெடுப்பாக, முதலமைச்சர் அவர்கள் உடல் தானத்துக்கும் பதிவு செய்திருக்கிறார்.

இப்போது, தமிழ்நாடு அரசின் முன்னெடுப்புகளைப் பின்பற்றி 'உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு' என்று ஆந்திர அரசும் அறிவித்திருக்கிறது. வழிகாட்டுகிறது, தமிழ்நாடு. வழி நடத்துகிறது திராவிடமாடல்!

## :ப்ளாஷ்பேக்





எல்.ஐ.சி ஆர்.பாலு

### தலைவருக்கு சால்வை!

2003-ஆம் வருடம் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் கழக நிகழ்வுகளில் பங்கேற்க, கோவை மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது, கோவை மாநகரப் பிரதிநிதியாக இருந்த நான் தளபதி அவர்களுக்குச் சால்வை அணிவித்து மரியாதை செய்தேன். அப்போது கழகத்தைச் சேர்ந்த ஊராட்சித் துணைத் தலைவர் இ.ஆனந்தன் அவர்களும் உடனிருந்தார்.

**–எல்.ஐ.சி ஆர்.பாலு, துணைத் தலைவர்.**
**கோவை மாவட்ட தொ.மு.ச**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### துக்க நாள், இன்ப நாள்!

1947-ஆம் ஆண்டு, இந்தியா சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15-ஆம் தேதியை துக்க நாளாக அறிவித்தார், தந்தை பெரியார். அது 'இன்ப நாள்' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். உலகம் வியக்கும் மகத்தான நிகழ்வை நம் கொள்கையை மட்டும் அளவுகோலாகக்கொண்டு காணக்கூடாதென்றார். திராவிடர் கழகத்தில் பிளவுண்டானது. அப்போது நடந்த தூத்துக்குடி திராவிடர் கழக மாநாட்டுக்கு அண்ணா வரவில்லை. தி.மு.கழகம் உருவானதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

566

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.